வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 24.8.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் பல்வேறு மேம்பாட்டு திட்டங்களை தொடக்கி வைத்து மேலும் பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

அனைத்து மாநில சட்டப்பேரவை தலைவர்களின் 2 நாள் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுடெல்லியில் தொடக்கி வைத்தார்.

இந்திய கிரிக்கெட் வீரர் சேதேஷ்வர் புஜாரா அனைத்து வகையான இந்திய கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக இன்று அறிவித்துள்ளார்.

கஜகஸ்தானில் நடைபெற்ற 16-ஆவது ஆசிய துப்பாக்கிச் சுடுதல் சேம்பியன் ஷிப் போட்டியின் 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷசன் பிரிவில் இந்திய துப்பாக்கி சுடும் வீரர் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் தங்கப் பதக்கம் வென்றார்.

மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி 2 நாள் பயணமாக நாளை குஜராத் செல்கிறார். அகமதாபாத்தில் 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டு திட்டங்களை தொடக்கி வைத்து உரையாற்ற உள்ளார். பின்னர் அகமதாபாத்தில் உள்ள **ஹன்சல் பூரில், ஹைபிரிட் பேட்டரி எலக்ரோடுகளின்** உற்பத்தி மற்றும் 100 நாடுகளுக்கு பேட்டரி மின்சார வாகன ஏற்றுமதியை பிரதமர் தொடக்கி வைக்கிறார். இந்த பயணத்தின் போது திரு மோடி, ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு ரயில்வே திட்டங்களையும் நாட்டிற்கு அர்ப்பணித்து வைப்பதுடன், மேம்படுத்தப்பட்ட சாலை பணிகள் மற்றும் ரயில்வே மேம்பாலப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்ட உள்ளார்.

*ராஜ்நாத் சிங்*

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்ப நாடு முழுமையாக தயாராக உள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். நாட்டின் தொழில்நுட்ப சாதனைகளைத் தாண்டி சுயசார்பு இந்தியாவின் புதிய சகாப்தமாக ககன்யான் திட்டம் விளங்கும் என்று நம்பிக்கை தெரிவித்த திரு ராஜ்நாத் சிங் இத்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்வெளி வீரர்கள் சுபான்ஷு சுக்லா, பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர், அஜித் கிருஷ்ணன், அங்கத் பிரதாப் ஆகியோரை புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பாராட்டினார்.

செயற்கை கோள்களை செலுத்துவது மட்டுமல்லாமல் விண்வெளித் துறையில் நாட்டின் முழு திறனை ககன்யான் வெளிப்படுத்தும் என்று கூறிய அமைச்சர் ஆராய்ச்சி மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததியினருக்கான எரிசக்தி, பொருளாதாரம், பாதுகாப்பு உள்ளிட்டவற்றை நமது விண்வெளி ஆய்வுகள் உறுதி செய்யும் என்றும் குறிப்பிட்டார்.

டிஆர்டிஓ

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பான DRDO, ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு ஆயுத அமைப்பின் முதல் விமான சோதனையை நேற்று ஒடிசா கடற்கரையில் வெற்றிகரமாக நடத்தியது.

ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு, ஆயுத அமைப்பு IADWS என்பது மேம்பட்ட மிக குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்பு, ஏவுகணைகள் மற்றும் உயர் சக்தி லேசர் அடிப்படையிலான நேரடி ஆற்றல் ஆயுதம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல அடுக்கு வான் பாதுகாப்பு அமைப்பாகும். இந்த சோதனையின் வெற்றிக்கு DRDO விஞ்ஞானிகள், இந்திய ஆயுதப் படையினர் மற்றும் தொழில் துறைக்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*அமித் ஷா*

அனைத்து மாநில சட்டப்பேரவை தலைவர்களின் 2 நாள் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுடெல்லியில் தொடக்கி வைத்தார்.

இதுகுறித்து மேலும் சில விவரங்கள்

(வாய்ஸ்)

*அமித் ஷா-2 (15)*

(வாய்ஸ்)

முதலாவது இந்திய சட்டப்பேரவை தலைவராக விட்டல்பாய் பட்டேல் பொறுப்பேற்றதன் நூற்றாண்டை கொண்டாடும் வகையில் டெல்லி சட்டப் பேரவை இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது. இதில் அனைத்து மாநில சட்டப்பேரவைகள், மற்றும் சட்ட மேலவைகளின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இந்நிகழ்ச்சியில் பேசிய திரு அமித் ஷா, நாட்டின் சுதந்திரத்தைப் போலவே சுதந்திரத்திற்கு பிறகு நாட்டை ஜனநாயக ரீதியாக நடத்துவதும் முக்கியமானது என்று வலியுறுத்தினார். சபையின் கண்ணியத்தை காப்பதும், சட்டப்பேரவை தலைவர்களின் பதவிக்கு மரியாதை செலுத்துவதும் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் டெல்லி ஆளுநர் திரு வினய் குமார் சக்சேனா மற்றும் முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உள்ளிட்டோர்

உரையாற்றினர். 2 நாட்கள் நடைபெறும் இந்த மாநாடு, பேரவைத் தலைவர்கள் சிறந்த நடைமுறைகளை கற்றுக் கொள்ள உதவும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறினார். மேலும் ஒரு நாட்டின் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள் மையப் புள்ளிகளாகும் என்றும், அவை சரியாக செயல்படவில்லை என்றால் ஜனநாயகம் என்பது கேள்விக் குறியாக மாறிவிடும் என்றும் அவர் தெரிவித்தார். சட்டமன்றங்களின் செயல்பாட்டில் புதிய அணுகுமுறைகளை பற்றி ஆராயவும், டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் சிறப்பு கவனம் செலுத்தி சட்டம் இயற்றுவதில் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுகிறது. மேலும் நிகழ்ச்சியின் போது விட்டல்பாய் பட்டேலின் நினைவு தபால் தலையும் இன்று வெளியிடப்பட்டது.

உபேந்திர திவேதி

ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர திவேதி 4 நாள் அரசு முறைப் பயணமாக நாளை அல்ஜீரியா செல்கிறார். இருநாடுகளுக்கு இடையிலான ராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்பு சவால்கள் உள்ளிட்டவை குறித்து அந்நாட்டு ராணுவ உயர் அதிகாரிகளுடன் இந்த பயணத்தின் போது அவர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

*ஃபிஜி பிரதமர்*

3 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள ஃபிஜி நாட்டு பிரதமர் Sitiveni Lligamamada Rabuka குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோரை சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்த உயர்மட்ட அளவிலான ஆலோசனை மேற்கொள்கிறார். ஃபிஜி பிரதமருடன் அந்நாட்டு சுகாதாரத் துறை அமைச்சர் உள்ளிட்டோர் அடங்கிய உயர்நிலைக் குழு ஒன்றும் இந்தியா வந்துள்ளது.

*வட கொரியா*

டிரோன்கள் அல்லது cruise போன்ற வான் வழி ஏவுகணைகளுக்கு உடனடியாக பதிலடி கொடுக்கும் வகையிலான ஏவுகணை பரிசோதனைகளை வடகொரியா வெவ்வேறு இலக்குகளை குறி வைத்து நடத்தி உள்ளது. அந்நாட்டு அதிபர் திரு Kim Jong-Un இந்த சோதனைகளை பார்வையிட்டதாக அந்நாட்டு அரசு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தென் கொரியாவும், அமெரிக்காவும் ulchi freedom shield என்ற 11 நாள் கூட்டு ராணு பயிற்சியை நடத்தி வரும் நிலையில் வடகொரியா இந்த ஏவுகணை சோதனைகளை நடத்தி உள்ளது குறிப்பிடத் தக்கது.

*புஜாரா*

இந்திய கிரிக்கெட் வீரர் சேதேஷ்வர் புஜாரா அனைத்து வகையான இந்திய கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக இன்று அறிவித்துள்ளார்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு……

(வாய்ஸ்)

*புஜாரா -2 (13)*

(வாய்ஸ்)

37 வயதான சேதேஷ்வர் புஜாரா கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக நாட்டின் 3-ஆவது தலைசிறந்த பேட்ஸ்மேனாக விளங்கியவர். இந்தியா சார்பில் 103 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில், 19 சதங்கள் மற்றும் 35 அரை சதங்கள் உட்பட 7 ஆயிரத்து 195 ரன்களை குவித்துத்துள்ளார். 71, T-20 போட்டிகள் விளையாடியதன் மூலம் ஆயிரத்து 556 ரன்கள் பெற்றார். 20-ஓவர் போட்டிகளில் 1 சதத்தையும் புஜாரா அடித்துள்ளார். 5 ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளிலும் அவர் விளையாடி 51 ரன் எடுத்துள்ளார். 2023-ஆம் ஆண்டு ஜூன் மாதம் லண்டன் ஓவல் மைதானத்தில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் இறுதிப் போட்டியில் கடைசியாக இவர் பங்கேற்றார். இவரது அதிகபட்ச ஸ்கோர் ஆட்டம் இழக்காமல் 206 - ரன் என்பது குறிப்பிடத் தக்கது. இன்றுடன்

ஓய்வு பெறும் புஜாரா தமக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

*கிஷன் ரெட்டி*

நாட்டில் நிலக்கரி இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளதால் 60 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலாவணி சேமிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறி உள்ளார். ஐதராபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் எஃகு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் பாய்லர்களில் இந்தியாவில் எடுக்கப்படும் நிலக்கரியை பயன்படுத்துவதற்கு ஏற்ப மாற்றி அமைக்கும்படி கேட்டுக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். நிலக்கரி மற்றும் இரும்பு தாது உற்பத்தி அதிகரித்து வருவதால், அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரியால் உள்நாட்டு நிலக்கரி தொழிலுக்கு அதிக பாதிப்பு இருக்காது என்றும் அவர் கூறினார். மேலும் நிலக்கரியை ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

*மல்லாடி*

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு ஏனாமில் ONGC எரிவாயு கசிவினால் நிகழ்ந்த தீவிபத்தில் சேதமான பகுதிகளை இன்று புதுச்சேரிக்கான டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணராவ் மற்றும் முதுநிலை காவல்

கண்காணிப்பாளர் திரு சிந்தா கோதண்டராமன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் தரியல்திப்பா விவசாயிகள் பார்வையிட்டனர்.

அஞ்சலக பார்சல் சேவை

அமெரிக்காவிற்கான அஞ்சலக பார்சல் சேவைகள் நாளை முதல் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அஞ்சல் துறை தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்து அனுப்பப்படும் 70 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான பொருட்களுக்கு வரும் 29-ஆம் தேதி முதல் 50 சதவிகித வரி விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கேட்

நாடு முழுவதும் உள்ள ஐஐடி உட்பட மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் முதுநிலை பொறியியல் படிப்புகளில் சேர "கேட்" எனும் தேசிய நுழைவுத் தேர்வுக்கு நாளை முதல் செப்டம்பர் 25 ஆம் தேதி வரை www.gate2025.iitr.ac.in எனும் இணையதள மூலம் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கி சுடுதல்

கஜகஸ்தானின் ஷிம்கென்டில் நடைபெற்ற 16-ஆவது ஆசிய துப்பாக்கிச் சுடுதல் சேம்பியன் ஷிப் போட்டி 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷசன் பிரிவில் இந்திய துப்பாக்கி சுடும் வீரர் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் 462.5 புள்ளிகள் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். சீனாவின் வென்யூ ஜாவோ வெள்ளிப்

பதக்கமும் ஜப்பான் வீரர் நவோயா ஒகாடா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். முன்னதாக 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் அணிப் போட்டியில் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர், செய்ன் சிங் மற்றும் அகில் ஷியோரன் ஆகியோர் அடங்கிய இந்திய ஆண்கள் அணி வெள்ளிப்பதக்கத்தை வென்றது.

*பட்டம் விடும் திருவிழா*

இலங்கை கொழும்புவில் இன்று சர்வதேச பட்டம் விடும் திருவிழா 2025 நடைபெற்றது. உலகம் முழுவதிலும் இருந்து 25 நாடுகளைச் சேர்ந்த 55 சர்வதேச பட்டம் விடுவோரும், இலங்கையைச் சேர்ந்த 500 பங்கேற்பாளர்களும் கலந்து கொண்ட இந்த போட்டிகளை இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் மற்றும் Derana Media Net Work-ம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. பின்னர் நடைபெற்ற கலை மற்றும் கலாச்சார கொண்டாட்டங்களிலும் அவர்கள் கலந்து கொண்டனர்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் பல்வேறு மேம்பாட்டு திட்டங்களை தொடக்கி வைத்து மேலும் பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

அனைத்து மாநில சட்டப்பேரவை தலைவர்களின் 2 நாள் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுடெல்லியில் தொடக்கி வைத்தார்.

இந்திய கிரிக்கெட் வீரர் சேதேஷ்வர் புஜாரா அனைத்து வகையான இந்திய கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக இன்று அறிவித்துள்ளார்.

கஜகஸ்தானில் நடைபெற்ற 16-ஆவது ஆசிய துப்பாக்கிச் சுடுதல் சேம்பியன் ஷிப் போட்டியின் 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷசன் பிரிவில் இந்திய துப்பாக்கி சுடும் வீரர் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் தங்கப் பதக்கம் வென்றார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---